பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 21 செவ்வாய்க்கிழமை 07.12.2021 கதிர் 32

### இது ரகசியம் அல்ல!

அரசியல் என்றாலே ஒருவருக்கு ஒருவர் கயிறு கொடுப்பது என்றாகி விட்டது.

பெரும்பாலும் அரசியல்வாதிகள் கொடுக்கும் கயிறை விழுங்கும் பொதுமக்கள் கடைசியில் ஏமாறுவதுதான் அரசியல் கதையின் கருவாக பக்கம்02 »

## 23 பேர் சாவு

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 15 ஆண்களும், 8 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்தவகையில், 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 2 ஆண்களும், ஒரு பெண்ணுமாக 3 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 13 ஆண்களும், ☞2

# பிரியந்த குமாரவின் கொடூரமான படுகொலைக்கு நீதி கிடைக்கும்!

## குடும்பத்தினரிடம் சஜித் வாக்குறுதி



பிரியந்த குமாரவின் கொலையாளிகளுக்கு எதிராக பாகிஸ்தான் அரசு சட்டத்தை அமுல்படுத்தும் எனநாம் நம்புகின்றோம். அதற்காக பாகிஸ்தான் அரசு நேர்மையான ☞2

## 'பவாஸ்' கொலை; நால்வர் சிக்கினர்

'வாழைத்தோட்டம் பவாஸ்' என்பவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் வாள்களுடன் 4 சந்தேகநபர்கள் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு காரொன்றில் வந்த சிலர், பவாஸைத் துரத்திச் சென்று வாளால் வெட்டிப் ☞2

# பாகிஸ்தானில் பாதுகாப்பு இல்லையெனில் இலங்கையர்களை நாட்டுக்கு அழைக்கவும்

## அரசிடம் ஜே.வி.பி. வேண்டுகோள்



பாகிஸ்தானில் உள்ள இலங்கையர்களுக்குப் பாதுகாப்பு இல்லையெனில், அவர்களை நாட்டுக்கு அழைக்கும்படி அரசிடம் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) வேண்டுகோள் விடுத்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில், அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. இதனைத் தெரிவித்தார். ☞2

## சபை அமர்வைப் புறக்கணித்தது சஜித் தலைமையிலான எதிரணி

### அமைதியின்மை சம்பவங்கள் தொடர்பில் ஆராயக் குழு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபை நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர்.

நாடாளுமன்றத்தில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தி அந்தக் கட்சியினர் சபையைப் புறக்கணித்துள்ளனர்.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் நேற்று சபைக்குள் ☞10

## டெங்கு ஒழிப்பு வாரம் குடாநாட்டில் ஆரம்பம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரையிலான ஒரு வார காலப்பகுதியை டெங்கு நுளம்பு கட்டுப்பாடு வாரமாகப் பிரகடனப்படுத்தப்படுவதுடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை சிரமதானம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

டெங்கு ஒழிப்பு ☞10

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எதிரணியினரை சந்தித்த பிரதமர்



நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுடன் பிரதமர் மஹிந்த ☞10

## காதலியைக் கடத்திய டிப்பர் கவிழ்ந்தில் ஒருவர் பலி; ஏனையோர் தப்பியோட்டம்

### புளியம்பொக்கணையில் நேற்றிரவு சம்பவம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.07

கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பகுதியில் காதலியை டிப்பர் வாகனத்தில் கடத்தியவர்கள் பெண் வீட்டார் துரத்துகின்றனர் என்ற அச்சத்தில் ☞10

## பெண் ஒருவர் சமைத்துக்கொண்டிருந்தபோது வவுனியா நகரில் வெடித்தது காஸ் சிலிண்டர்

### வீட்டில் இருந்தவர்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை

(வவுனியா நிருபர்)

பெண் ஒருவர் சமைத்துக் கொண்டிருந்தபோது வவுனியா நகரப் பகுதியில் காஸ் சிலிண்டர் ஒன்று வெடித்துள்ளது.

நேற்றிரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா, சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் பெண் ஒருவர் இரவுச் சாப்பாடு சமைத்துக் கொண்டிருந்தபோது காஸ் ☞10



## விசாரணை குறித்து நாளாந்தம் விளக்கம்

### இலங்கைக்குப் பாகிஸ்தான் உறுதி

பாகிஸ்தானில் இலங்கையரான பிரியந்த குமார கொல்லப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை முன்னெடுக்கப்படும் எனவும், அது தொடர்பில் இலங்கைக்கு நாளாந்தம் தெளிவுபடுத்தப்படும் எனவும் பாகிஸ்தான் அரசு உறுதியளித்துள்ளது. ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருக்கும்.

இன்றைய என் பத்தியின் சாரம்சமும் இப்படிக் கயிறை விழுங்கிய கதைகள் பற்றியதுதான். ஒன்று – அரசியல்வாதியின் கயிற்றை அரசியல்வாதி விழுங்கிய கதை. இன்னொன்று – அரசியல் வட்டாரம் கொடுத்த கயிறை நான் விழுங்கிய கதை.

முதலாவது – இரண்டொரு தினங்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் அழைத்துக் கலந்துரையாடியமை குறித்து நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். கொழும்பு ஊடகங்கள் பலவும் அதே விடயத்தை நேற்றுப் பிரசுரித்திருந்தன.

அந்த எம்.பிக்களின் கூட்டத்தில் ஒரு கயிறு கொடுக்கப்பட்டது. புதுடில்லிக்கு விஜயம் செய்த நிதி அமைச்சர் பஸில் அங்கு தாம் எதிர்பார்த்த அனைத்து உதவித் திட்டங்களையும், சகாயங்களையும் புதுடில்லியிடமிருந்து பெற்று வந்திருக்கின்றார் என்று கயிறு கொடுத்தார் போலும்.

அதை விழுங்கிய காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன நேற்று பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி பஸிலின் அந்தச் சாதனையை புளுகோ புளுகு என்று புளுகித் தள்ளினார். "பஸில் எதிர்பார்த்தவற்றை எல்லாம் பெற்று வந்து விட்டார். அதனால் நெருக்கடிகள் ஓரளவு தீர்ந்து விடும். நாட்டுக்கும் மக்களுக்கும் பஸில் கடவுளைப் போன்றவர்." – என்றெல்லாம் அவர் விழுங்கிய கயிறு அந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் பேச வைத்தது. அவர் விழுங்கியது கயிறா, இல்லையா என்பதை வாசகர்களே தீர்மானிக்கட்டும்.

இனி, அடுத்த விடயத்துக்கு வருவோம்.

இப்போது தமிழ் அரசியல் பரப்பில் அதிகம் பேசப்படும் விடயம், இந்தியாவுக்கு – புதுடில்லிக்கு – வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஒரு வாரம் ஒத்திவைக்கும்படி கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கோரியமையை ஒட்டிய சர்ச்சைதான்.

பலரும் அவ்விடயத்தை ஒட்டி கூட்டமைப்பினரை – குறிப்பாக அதன் தலைவர் சம்பந்தனை – திட்டித் தீர்க்கின்றனர். கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர் சித்தார்த்தன் உட்பட.

என்ன சமாதானம் கூறினாலும் அப்படிச் சீறுவோரின் கருத்தில் ஒரு நியாயம் இருக்கின்றது. அது மறுக்க முடியாத ஒன்று.

அதுவும், பிரதமர் மோடியின் சந்திப்புக்கு நேரம் கேட்டுப் போய் நின்ற ராஜபக்ஷக்களில் ஒரு சகோதரருக்கு நேரம் ஒதுக்காமல் திருப்பி அனுப்பி வைத்து விட்டு, அடுத்த ஓரிரு தினங்களில் கூட்டமைப்பினரை புதுடில்லிக்கு அழைத்து மோடி சந்தித்திருப்பாராயின் – அது நடந்திருக்குமாயின் – கொழும்பின் முகத்தில் புதுடில்லி அரசியல் ரீதியில் ஓங்கி அறைந்த விவகாரமாக அது இருந்திருக்கும். ஆனால் சம்பந்தனின் முடிவால் அது நழுவி விட்டது.

தாம் இப்படி ஒரு முடிவு எடுத்தமைக்கான காரணத்தைக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தானாக வெளிப்படுத்தவேயில்லை. எனது செய்தியாளர் இரண்டு தடவைகள் தொலைபேசி அழைப்பு எடுத்த போதும் 'ஹலோ' என்று பதிலளித்தவர், ஏன் புதுடில்லி விஜயத்தை ஒத்திவைத்தீர்கள் என்று கேட்டதும் கொஞ்ச நேரம் பதில் கூறாமல் இருந்து விட்டு தொலைபேசியைத் துண்டித்து விட்டார். அதற்குப் பின்னர் தொலைபேசி அழைப்பில் அவர் வரவேயில்லை. வயதும், மூப்பும் அவருக்கு வசதி – ஊடகத் தரப்புகளை சந்திக்காமல் வெட்டி விடுவதற்கு.

எனவே இந்தக் கேள்விக்கு இப்போதைக்கு அவர் பதில் சொல்லப் போவதும் இல்லை. பதில் சொல்லவும் மாட்டார்.

எனவே அவருக்கு நெருக்கமான – எனக்குப் பரிச்சயமான – தரப்பு மூலம் விடயத்தைக் கேட்டறிந்து, ஓரிரு தினங்களுக்கு முன்னர் எழுதியிருந்தேன்.

அதில்தான் அரைவாசி உண்மை. அரைவாசி கயிறு என்பதை இப்போது உறுதிப்படுத்த முடிந்தது. இரண்டையும் விழுங்கி வாசகர்களுக்கு நான் தந்து விட்டேன். உண்மையை நானாக வெளிப்படுத்துவது என் எழுத்தின் மீதான நம்பத்தன்மையை மேம்படுத்தும் என்பதால் உண்மையை வெளிப்படுத்துகிறேன்.

புதுடில்லி அழைப்பை ஒரு வாரத்துக்கு தள்ளிப் போட சம்பந்தன் கோரியமைக்கு இரண்டு விடயங்களை என் பத்தியில் கோடி காட்டியிருந்தேன்.

ஒன்று – புதுடில்லி அழைத்த காலத்தில் அங்கு சென்றால் அந்த அணியில் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா இணைய முடியாது. அவரின் மகனுக்கு யாழ்ப்பாணத்தில் திருமண வேளை. அதனால் அவர் புதுடில்லிப் பயணத்தில் பங்குபற்ற முடியாது. மாவை சேனாதிராசாவும் புதுடில்லிப் பயணத்தில் பங்குபற்ற வசதியாக அதை ஒத்தி வைக்கக் கோரினார் சம்பந்தன்.

அடுத்தது – சம்பந்தன் தாமாக விரும்பி – கட்டாயம் மாவை சேனாதிராசாவையும் அந்தப் பயணத்தில் அழைத்துச் செல்ல வேண்டும், விட்டுச் செல்ல முடியாது என சுயாதீனமாகத் தீர்மானித்து, அந்த முடிவை எடுத்திருந்தார் என எழுதியிருந்தேன்.

என் எழுத்தில் முதல் விடயம் சரி. இரண்டாவது விடயம் எனக்குக் கொடுக்கப்பட்ட கயிறு என்பதை இப்போதுதான் அறிந்து உறுதிப்படுத்திக் கொண்டேன்.

மாவையை விட்டுவிட்டுப் போகக் கூடாது என்று அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமையினால்தான் அப்படி ஒரு முடிவுக்கு வர சம்பந்தன் நிர்ப்பந்திக்கப்பட்டார் என்பதை இப்போது என்னால் உறுதிப்படுத்த முடிந்தது.

இந்த அழுத்தத்தை சித்தார்த்தனோ, செல்வமோ, சுமந்திரனோ கொடுக்கவில்லை என்பதையும் என்னால் ஊர்ஜிதப்படுத்த முடிந்தது.

"இந்தியா அழைக்கின்றது. அதைத் தவற விட முடியாது. என்னைப் பார்க்காதீர்கள். நீங்கள் போங்கள்." – என்றுதான் சுமந்திரனுக்கும் ஏனையோருக்கும் இன்று வரை மாவை சேனாதிராசா கூறிவருகின்றார்.

"ஏன் சம்பந்தன் அண்ணன் இப்படிச் செய்தார்? புதுடில்லிப் பயணத்தைத் தள்ளி வைக்கக் கேட்டமை தப்பல்லவா?" – என்ற பாணியில் நேற்றும் சில வட்டாரங்களுக்குக் கதை விட்டிருக்கின்றார் மாவையர்.

ஆனால் அது அவர் நிலைப்பாடல்ல. மாவையரும் சம்பந்தனும் இந்த விடயத்தில் எப்போது பேசினார்கள், எப்படிப் பேசினார்கள், என்ன வார்த்தைப் பிரயோகங்கள் இடம்பெற்றன என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியவில்லை. எனினும் மாவை பக்கத்தில் இருந்து சம்பந்தனுக்குக் கொடுக்கப்பட்ட எல்லையற்ற அழுத்தம் காரணமாகத்தான் அப்படி ஒரு முடிவை சம்பந்தன் எடுத்தார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடிந்தது.

இப்படி இரட்டைத் தனமாக மாவையர் பேசுவதும், நடந்து கொள்வதும் சகஜம் தான்.

தேசியப்பட்டியல் எம்.பி. நியமன விடயத்தில் கூட தன்னிடம் நேரில் பேசிய சுமந்திரன், ஸ்ரீதரனிடம் எனக்கு அது வேண்டாம் என்றார். தொலைபேசியில் பேசிய சம்பந்தன், கட்சிச் செயலாளர் துரைராஜசிங்கத்திடமும் அப்படித்தான் கூறினார். பின்னர் தமக்கு அது வேண்டும் என்ற செய்தியுடன் சி.வீ.கே.சிவஞானத்தையும், கனகசபாபதியையும் தூதுவர்களாகச் சம்பந்தன் தரப்பினரிடம் கடைசி நேரத்தில் விரைந்து அனுப்பினார் அவர். அவரின் இரட்டை நிலைப்பாட்டுப் போக்கால்தான் அந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தும் விடயமாயிற்று.

ஆக, தனது பங்கு பற்றலுக்காக இந்த புதுடில்லி அழைப்பை ஒத்திவைக்கச் செய்து விட்டு, அதன் பொறுப்பை சம்பந்தன் தலையில் போடச் செய்யும் தந்திரம் மாவைக்கு ஒன்றும் புதிய விடயமல்ல.

விதைக்கப்பட்ட கயிறை நாங்களும் விழுங்கி விட்டதால் கதை அப்படியே சோடிக்கப்பட்டும் விட்டது.

போதாக்குறைக்கு வயது போனமையால், ஊடகங்களுக்குப் பேட்டியளித்து, உண்மையை அம்பலப்படுத்தும் நிலையில் சம்பந்தன் இல்லாமல் போனதும் இரட்டை வேடக்காரருக்கு வலு வாய்ப்பாகி விட்டது.

எம்.பி. பதவியை இழந்து, கட்சித் தலைமையையும் தாரைவார்க்க வேண்டிய இக்கட்டில் சிக்கியிருக்கும் மாவை சேனாதிராசா, தன்னை விட்டு விட்டு கூட்டமைப்புக்கு மிக முக்கிய புதுடில்லிப் பயணத்தை மேற்கொள்ளுமாயின், இனி வருங்காலத்தில் அனைத்து விடயங்களிலும் தாம் ஓரங்கட்டப்படும் நிலைமை உறுதியாக வந்து விடும் என்று அஞ்சி நகர்த்திய திருவிளையாடல்தான் இது. பாவம் சம்பந்தன். பல தரப்புகளிடமிருந்தும் திட்டு வாங்கித் தள்ளுகின்றார்.

புதுடில்லி விடுத்த அழைப்பைத் தள்ளிப் போடக் கோரியமை தமிழர் வரலாற்றில் அர்த்தமற்ற தவறு. அதற்கான காரணத்தை – பொறுப்பை – சம்பந்தன் விளக்கப் போவதில்லை. அவர் பகிரங்க மேடைக்கு வராதவரை மாவையின் குட்டும் அம்பலமாகப் போவதில்லை.

இரட்டை வேட நிலைப்பாடு உள்ள தலைவர்கள் இருக்கும் வரை தமிழருக்கு விமோசனம் கிட்டாது என்பது மட்டும் உண்மை.

– மின்னல் –

## 'பவாஸ்' கொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

படுகொலை செய்துள்ளனர்.

'வாழைத்தோட்டம் பவாஸ்' என்பவர் குற்றச்செயல்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு சில காலம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டவர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைத்தோட்டம் பொலிஸார் மற்றும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

## விசாரணை குறித்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பாகிஸ்தானில் உயிரிழந்த பிரியந்த குமாரவின் பிள்ளைகள் மற்றும் குடும்பம் தொடர்பில் அரசு கரிசனை கொண்டுள்ளது. இழப்பீட்டைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் பாகிஸ்தான் அரசுடன் பேச்சு நடத்தப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள், நீதி நிலைநாட்டப்படும் எனப் பாகிஸ்தான் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் உறுதியளித்துள்ளனர்.

விசாரணை தொடர்பில் இலங்கைக்கு நாளாந்தம் தெளிவுபடுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது – என்றார்.

## பிரியந்த குமார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அர்ப்பணிப்பை மேற்கொள்ளும் எனவும் நம்புகின்றோம்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாகிஸ்தானின் சியல்கோட்டிலுள்ள தொழிற்சாலையில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் வீட்டுக்கு எதிர்க்கட்சித் தலைவர் நேற்று சென்று சோகத்தால் துயர் அடைந்துள்ள குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்தார்.

கொடூரமான இந்தப் படுகொலைக்கு ஐக்கிய மக்கள் சக்தி கண்டனம் தெரிவிக்கின்றது எனக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், மறைந்த பிரியந்தவுக்கு நீதி வழங்குவதற்கு உறுதியளிப்பதாகவும் இதன் போது தெரிவித்தார்.

## 23 பேர் சாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

7 பெண்களுமாக 20 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 484 ஆக உயர்வடைந்துள்ளது.

## பாகிஸ்தானில் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரியந்த குமாரவைக் கொடூரமாகக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புபட்ட அனைவரும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இதன் பின்னர் எந்தவொரு இலங்கையருக்கும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அடிப்படைவாதங்களைத் தோற்கடிக்கும் சவால் இலங்கைக்கு இருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.




பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2021
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC

16
2021

"வன்முறைகளை 'சகித்துக் கொள்' என்ற வார்த்தையும் வன்முறைதான். தொடர்ந்தும் சமூக அணிதிரட்டலோடு வன்முறைக்கு எதிராக போராடுவோம்! குரல் கொடுப்போம்! அது நம் ஒவ்வொருவரினதும் தார்மீக கடமையும் பொறுப்பும் ஆகும்!!!"

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

காலைக்கதிர்
Kalaikkathir

# கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் தொடர்பான ஒப்பந்தம் அமைச்சரவையில்!



கொழும்பு, டிசெ. 07

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு விற்பனை செய்வது தொடர்பாகக் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் நேற்று (திங்கட்கிழமை) அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

சமீபகாலமாக இந்த ஒப்பந்தம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், இதனை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கிடையில் இந்த உடன்படிக்கைக்கு எதிராக உயர் நீதிமன்றில் கொழும்பு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் எல்லே குண வங்ஸ தேரர் உள்ளிட்ட தரப்பினரால் அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் அமைச்சரவைத் தீர்மானத்தை சவால் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களின் பிரதிவாதிகளாக அமைச்சர்களான உதய கம்மன்பில, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு காரணம் மற்றும் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான சட்ட கட்டமைப்புகள் என்பவற்றை நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று அமைச்சரவையில் முன்வைத்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## கால்நடை வைத்தியர் சங்க 73 ஆவது வருடாந்த மாநாடு



இலங்கை கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் 73 ஆவது வருடாந்த மாநாடு மற்றும் பொதுச் சபை கூட்டம், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட சிரேஷ்ட கால்நடை மருத்துவர்களான எச்.பீ.பிரேமசிறி மற்றும் ஆர்.எம்.பீ.எச்.தசநாயக்க ஆகியோருக்கு இதன்போது பிரதமரால் சிறப்பு பாராட்டு விருது மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கிவைக்கப்பட்டன. இலங்கை கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் 73ஆவது மாநாட்டின் தலைவர் கால்நடை வைத்தியர் எரந்திகா குணவர்தனவால் வருடாந்த மாநாட்டுக்கு வருகைத்தந்த பிரதமர் உள்ளிட்ட விருந்தினர்கள் வரவேற்கப்பட்டனர்.

இதன்போது இடம்பெற்ற பொதுச்சபை கூட்டத்தின் போது இலங்கை கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் புதிய தலைவராக கால்நடை வைத்தியர் சுசந்த மல்லவ ஆராச்சி தெரிவு செய்யப்பட்டார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டீ.பீ.ஹேரத் உள்ளிட்ட இலங்கை கால்நடை வைத்திய சங்கத்தின் வைத்தியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## தடுப்பூசி வழங்கலை கட்டாயமாக்குங்கள்!

### உபுல் றோஹண கோரிக்கை

தடுப்பூசி வழங்கலைக் கட்டாயமாக்க வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, அதற்கான சட்டத்தைக் கொண்டுவருவதற்கான பணிகளைத் துரிதப்படுத்துமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

புதிய கொரோனா வைரஸ் திரிவான ஒமிக்ரோன் நாட்டில் கண்டறியப்பட்டதை அடுத்து அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதேநேரம், கொரோனா அறிகுறிகள் தென்படுமாயின் அதுதொடர்பாக மிகுந்த அவதானம் செலுத்துமாறும் அவர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

## கிளிநொச்சியில் மர்மப்பொருள் வெடிப்புச் சம்பவம்;

# உயிரிழந்தவரின் சடலத்தை பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவு



கிளிநொச்சி, டிசெ. 07

கிளிநொச்சி - உமையாள்புரம் பகுதியில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தின்போது உயிரிழந்தவரின் சடலத்தை, உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறும் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.கார்த்திகா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி உமையாள்புரம் சேலைநகர் பகுதியில் மர்ம வெடிபொருள் ஒன்றை வீட்டில் வைத்து கிரைண்டர் ஒன்றால் வெட்டியபோது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தின்போது, ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் 13 வயது சிறுவன் ஒருவன் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான், மேற்படி சடலத்தை உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறும் குறித்த வீட்டு வளாகத்தில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த ஆபத்தான வெடி பொருள்களையும் பார்வையிட்டு, அவற்றைப் பாதுகாப்பான முறையில் அகற்றுமாறும் கட்டளையிட்டுள்ளார்.

# சட்டவிரோத மணல் அகழ்வு மட்டக்களப்பில் இருவர் கைது

மட்டக்களப்பு – வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிரான் பகுதியிலுள்ள ஆற்றில் சட்டவிரோதமாக ஆற்று மணலை அகழ்ந்து, கனரக வாகனத்தில் ஏற்றிய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மணலை கொண்டு செல்வதற்கு சந் தேகநபர்கள் பயன்படுத்திய கனரக வாகனங்களையும் வாழைச்சேனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.







கட்டடத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எந்திரி. சுந்தரலிங்கம் சுந்தரகுமார் அவர்களின் மணிவிழா கடந்த சனிக்கிழமை (04.11.2021) சிறப்பாக நடைபெற்றது.

மணிவிழா நாயகனும் துணைவியாரும் மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கேற்றலுடன் மணிவிழா நிகழ்வு ஆரம்பமாகியது.

எந்திரி சு.சுந்தரகுமார் அவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் முப்பது வருடங்கள் சேவையாற்றியதனை நினைவு கூர்ந்து பாராட்டிப் பலரும் உரையாற்றினர். மணிவிழாவின் போது மாலைகள் அணிவித்து பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## வைரஸின் அணுகுண்டு வீரியம்

2019ஆம் ஆண்டு சீனாவின் வுஹான் நகரில் முதன் முதலில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸ் உலகத்தையே ஒரு புரட்டுப் புரட்டிப் போட்டிருக்கின்றது.

கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்ணுயிரி பல லட்சம் மக்களின் உயிர்களைக் காவு கொண்டமை மட்டுமல்ல, இலங்கை உட்பட பல நாடுகளின் பொருளாதாரத்தையே முற்றாகக் கவிழ்த்துப் போட்டு நிற்கின்றது.

இந்த நெருக்கடியிலிருந்து உலகம் இன்னுமே மீளவேயில்லை.

இரண்டாவது தடுப்பூசியைத் தாண்டி, மூன்றாவது ஊக்கப்படுத்தும் 'பூஸ்டர்' தடுப்பூசியையும் செலுத்தத் தொடங்கி விட்டோம்.

ஆனாலும் வைரஸ் கட்டுப்பாட்டுக்குள் வந்ததாக இல்லை. சத்தம் சந்தடியின்றி அது எகிறிக் கொண்டிருக்கின்றது. புதுப் புது வடிவங்கள் எடுத்து, புதுப் புதுக் கோலங்கள் கொண்டு, புதிய தாக்குதல் வீரியத்துடன், அது உருமாறி, விகாரமடைந்து, திரிவுற்று, மனித குலத்தை ஒரு கைபார்த்து வருகின்றது.

இப்போது செலுத்தப்படும் தடுப்பூசிகள் எவ்வளவு காலத்துக்குத் தாக்குப் பிடிக்கும் என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. தடுப்பூசி போட்டவர்களில் சொற்ப வீதத்தினரையும் அது தாக்கி, தன் பிடிக்குள் ஆள்படுத்துகின்றது.

அதற்கிடையில் அதிதீவிர வீரியத்துடன், வேகமாகத் தொற்றிப் பரவி, மனித குலத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் கொரோனா திரிவாக 'ஒமிக்ரோன்' ரகம் உலகெங்கும் பரவத் தொடங்கி விட்டது. அதை எதிர் கொள்ள வழியின்றி விழிபிதுங்கி நிற்கின்றது உலகம். இப்போது பாவனையில் உள்ள – பயன்படுத்தப்படுகின்ற – தடுப்பூசிகள், இந்த 'ஒமிக்ரோன்' திரிவைக் கட்டுப்படுத்த சக்தியற்றவை என்கின்ற மருத்துவ வட்டாரங்கள்.

அதனால், ஒமிக்ரோன் வைரஸையும் சேர்த்துக் கட்டுப்படுத்தக் கூடிய புதிய தடுப்பு மருந்தை அவசர அவசரமாகக் கண்டு பிடிக்க வேண்டிய கட்டாயம் – நெருக்கடி – மருத்துவத் துறைக்கு ஏற்பட்டுள்ளது.

புதிது புதிதாக தடுப்பூசிகளைக் கண்டுபிடித்து, உலகம் முழுவதும் உள்ள மனிதர்களுக்கு முன்னேற்பாடாக அவற்றைச் செலுத்தினாலும், அந்தத் தடுப்பூசிகளுக்கு எல்லாம் 'டிமிக்கி' கொடுத்து விட்டு, அவற்றுக்கு அடங்காத புதிய வீரியத்துடன், புதிய வடிவில் பிறப்பாக்கம் பெறுகிறது இந்த வைரஸ்.

இந்தக் கொரோனா வைரஸ் ரகத்துடனேயே மாரடித்துக் களைத்துத் துவண்டு போயிருக்கும் உலகுக்கு, இதற்கான 'அஸ்ட்ரா ஜெனக்கா' தடுப்பூசியைத் தயாரித்த நிபுணர்களுள் ஒருவரான சாரா கதரின் கில்பேர்ட் அம்மையார் புதிய எச்சரிக்கைக் குண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டிருக்கின்றார்.

"எதிர்காலத்தில் தோன்றும் தொற்று நோய்கள் கொரோனாவை விட மிக ஆபத்தானவையாக இருக்கக் கூடும். ஒரு வைரஸ் நமது உயிர் மற்றும் வாழ்வாதாரத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியது என்பது இதுவே கடைசியாக என்று இருக்காது. உண்மை என்னவென்றால், அடுத்துத் தோன்றும் தொற்று நோய் கொரோனாவை விட மிக ஆபத்தானதாக இருக்கும். அது மிகவும் தீவிரமாகத் தொற்றக் கூடியதாக அல்லது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதாக அல்லது இரண்டையும் கொண்டதாக இருக்கக் கூடும்" – என்று அவர் எச்சரித்திருக்கின்றார்.

உலகில் வெடிக்கத் தயாரான நிலையில் இருக்கும் பல நூறு அணுகுண்டுகளின் அச்சுறுத்தலை உலகம் எதிர்கொண்டு சமாளித்தாலும், கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரியான இந்த வைரஸின் அச்சுறுத்தலை எதிர்கொள்வது சிக்கலானதாகத்தான் இருக்கப் போகின்றது.

# மின்னுற்பத்தி நிலையங்களை உருவாக்கினால் மின்சாரத் துண்டிப்பைக் கட்டுப்படுத்த முடியும்!

## மின்சார பொறியியலாளர்கள் தெரிவிப்பு

நாட்டில் குறைந்த செலவில் மின்னுற்பத்தி நிலையங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மின்சார பொறியியலாளர்கள் தொழிற்சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதில் சிக்கல் நிலவுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், மின்சார துண்டிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக குறைந்த செலவில் மின்னுற்பத்தி நிலையங்களை உருவாக்க வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் இரண்டு மின்னுற்பத்தி இயந்திரங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில், கடந்த 3ஆம் திகதி மின்சார விநியோகம் தடைப்பட்டது.

இதனையடுத்து 4 நாள்களுக்கு நாட்டின் சில பாகங்களில், மாலை 6 மணி முதல் இரவு 9.30 வரையிலான காலப்பகுதிக்குள் ஒரு மணிநேரம் மின் விநியோகத்தை மட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரம் மற்றும் காட்டுமிராண்டித்தனமானது உலகில் மாற்றம்பெற்ற இஸ்லாமிய தீவிரவாதம்

## ஞானசார தேரர் காட்டம்



இஸ்லாமிய தீவிரவாதம் தற்போது உலகில் உள்ள வேறு எந்த வகை தீவிரவாதத்தையும் விட பயங்கரமானதாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் மாறியுள்ளது என ஒரே நாடு - ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தானின் சியல்கோட் பகுதியில் பிரியந்த குமார ஒரு கும்பலால் கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவத்தைக் கொண்டு இலங்கையில் வளர்ந்து வரும் இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மத தீவிரவாதம் மட்டுமல்ல, எந்த வகையான தீவிரவாதத்தின் விளைவுகளும் பேரழிவை ஏற்படுத்தும் என குறிப்பிட்ட ஞானசார தேரர், ஆனால் இஸ்லாமிய தீவிரவாதம் அனைத்தையும் விட கொடூரமானதும் காட்டுமிராண்டித்தனமானதுமாக மாறியுள்ளதாகத் தெரிவித்தார்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம், அறிவு, கலாசாரம், நாகரிகம், கலை, தத்துவம் உள்ளிட்ட பல நூற்றாண்டுகளாக மனிதனின் அனைத்துச் சாதனைகளின் மதிப்புகளையும் இது இடைவிடாமல் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆகவே, தற்போது உலகை ஆட்டிப் படைத்து வரும் இஸ்லாமிய தீவிரவாதத்தின் உண்மைத் தன்மையை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் இலங்கையிலும் அதிகரித்து வரும் இஸ்லாமிய தீவிரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்றும் ஞானசார தேரர் தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் இலங்கையர் கொலை; இதுவரையில் 124 பேர் கைதாகினர்

## 900 ஊழியர்களிடம் விசாரணை



பாகிஸ்தான் - சியல்கோட் பகுதியில் இலங்கையர் ஒருவர் சித்திரவதைக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை 124 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த பொறியியலாளர் வெள்ளிக்கிழமையன்று ஒரு கும்பலால் அடித்து எரியூட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார்.

குறித்த காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில் இலங்கை அரச தலைவர்கள் உட்பட பலர் கண்டனம் வெளியிட்டிருந்தனர்.

இந்நிலையில் இந்த விடயம் கண்டிக்கத்தக்கது எனக் கூறியிருந்த அந்நாட்டு பிரதமர் இம்ரான்கான், சம்பவத்துடன் தொடர்புடையவர்களைத் தண்டிப்போம் என்றும் உறுதியளித்திருந்தார்.

அந்தவகையில் கைது செய்யப்பட்ட 124 பேர் கொண்ட குழுவில் 19 பேர் முக்கிய சந்தேக நபர்களாகக் கருதப்படுகின்றனர் என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களில் 13 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் சம்பவம் தொடர்பாக 160 சி.சி.டிவி. கமரா காணொலிகளை ஆய்வு செய்த பின்னர் 900 தொழிற்சாலை ஊழியர்களிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சிவானந்தா தேசிய பாடசாலை ஆசிரியர் ஒருவரை இடமாற்றுமாறுகோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட கல்லடி, உப்போடை சிவானந்தா தேசிய பாடசாலைக்கு முன்பாக ஆசிரியர் ஒருவரை இடமாற்றம்செய்யுமாறு கோரி பெற்றோர் மற்றும் பாடசாலை பழைய மாணவர்களால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலைமையேற்பட்டது.

இலங்க ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாண இணைப்பாளரும் குறித்த பாடசாலையின் ஆசிரியருமான பொ.உதயரூபனை பாடசாலையிலிருந்து இடமாற்றம் செய்யுமாறு கோரியே இந்த போராட்டம் நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலைகள் கதவுகள் மூடப்பட்டு ஆசிரியர்கள், மாணவர்கள் உள்செல்ல அனுமதிக்கப்படாமல் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் காரணமாக பாடசாலைக்கு வருகைதந்த மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டமையைக் காணமுடிந்தது.

பாடசாலைக்கு வருகைதந்த ஆசிரியர்கள், பாடசாலைக்குள் செல்ல அனுமதிக்கப்படாத காரணத்தால் பாடசாலைக்கு வெளியில் வைக்கப்பட்டிருந்த வரவு குறிப்பேட்டில் கையொப்பங்களை இட்ட மையுடன் வெளியில் நீண்டநேரம் காத்திருக்கும்சூழ்நிலையேற்பட்டதுடன்பாடசாலைக்கு வருகைதந்த மாணவர்கள் திரும்பிச் சென்றமையையும் காணமுடிந்தது.

பாடசாலைக்கு முன்பாக ஒன்றுகூடிய பழைய மாணவர்கள், பெற்றோர் மேற்படி ஆசிரியரை இடமாற்றுமாறு கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆசிரியர் மீது 41குற்றச்சாட்டுகள் திணைக்களத்தால் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இதுவரையில் அந்த ஆசிரியரை இடமாற்ற நடவடிக்கையெடுக்கப்படவில்லையெனவும் ஆர்ப்பாட்டத்தின்போதுகுற்றஞ்சாட்டப்பட்டது.

பாடசாலைகளில் பல குழப்பமான செயற்பாடுகளை அந்த ஆசிரியர் முன்னெடுத்துவருகின்றமையுடன் அவரால் பாடசாலையில் மாணவர்களில் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன எனவும் தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் நிகழ்நிலையூடாகக் கற்பித்தல்செயற்பாடுகளை முன்னெடுத்த ஆசிரியர்களும் இந்த ஆசிரியரால் அச்சுறுத்தப்பட்டு அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் மேற்படி ஆர்ப்பாட்டத்தின்போது பாடசாலைக்கு வருகைதந்த ஆசிரியர்களுக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டமையுடன் வாய்த்தர்க்கமும் ஏற்பட்டதால் அப்பகுதியில் பதற்ற நிலைமையேற்பட்டது. ஓர் ஆசிரியரின் செயற்பாட்டுக்காக முழு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளையும் பாதிக்கும் வகையில் செயற்படுவதை அனுமதிக்க முடியாது எனவும் இதன்போது ஆசிரியர்கள் தெரிவித்தனர். இதன்போது ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களில் சிலரால் ஆசிரியர்கள் சிலர் அச்சுறுத்தப்பட்டனர் எனவும் ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

மேற்படி ஆசிரியரும் பாடசாலைக்கு வருகைதந்திருந்த நிலையில் அவரை பாடசாலைக்குள் அனுமதிக்காமல் அவருக்கும் எதிராக ஆர்ப்பாட்டத்தில்கலந்துகொண்டவர்கள் கோஷங்களை எழுப்பியமையும் காணமுடிந்தது.

இதேவேளை மட்டக்களப்பு வலய கல்விப்பணிப்பாளரின் சார்பில் வருகைதந்த மண்முனை வடக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி சா.ரவிச்சந்திரா ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடியமையுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களால் வழங்கப்பட்ட மகஜரை மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி நடவடிக்கையெடுப்பதாக வழங்கிய உறுதிமொழியையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டதுடன் பாடசாலை நுழைவாயில்க ளும் திறக்கப்பட்டன. அந்த ஆசிரியரின் செயற்பாடுகள் தொடர்பாக கல்வி அமைச்சு உட்பட திணைக்களங்களுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளபோதிலும் இதுவரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனமண்முனைவடக்குகோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி சா.ரவிச்சந்திரா தெரிவித்தார். இதேநேரம் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தங்களை தாக்குமுற்பட்டனர் எனக் கூறி ஆசிரியர்கள் சிலரால் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர் கள் தங்களை அச்சுறுத்தினர் எனவும் தாக்கமுற்பட்டனர் எனவும் கூறி இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் விபத்து இருவர் படுகாயம்

கிளிநொச்சி– பரந்தன் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் சிக்கிய இருவர், படுகாயமடைந்த நிலையில் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) காலை 11மணியளவில் பரந்தன் ஊடாக பூநகரிக்குத் திரும்பும் பிரதான சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பூநகரி வீதியிலிருந்து ஏ – 9 வீதிக்கு பயணித்த மோட்டார் சைக்கிள், ஏ –9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த விபத்தில் பலத்த காயம் அடைந்த இருவரும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். கிளிநொச்சி– வட்டக்கச்சி பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 22 வயதுடைய இளைஞர்களே விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கை முதலீட்டுச் சபை உறுப்பினர்களின் இராஜினாமாக்களை ஜனாதிபதி ஏற்க மறுப்பு



இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் மற்றும் சபை உறுப்பினர்களின் இராஜினாமாக்களை ஏற்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மறுத்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று (திங்கட்கிழமை) அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை முதலீட்டுச் சபை, கடந்த வாரம் ஒப்படைக்கப்பட்ட இராஜினாமா கடிதங்களை ஜனாதிபதி ஏற்க மறுத்துவிட்டார் என்பதை அறிவிக்க விரும்புவதாகக் கூறியுள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் மற்றும் அந்தந்த வாரிய உறுப்பினர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்பட்ட கடிதத்தில் –

நாட்டின் நலனுக்காக வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும், கொவிட் தொற்றுக்குப் பின்னரான பொருளாதார மாற்றத்துக்கு உதவுவதற்கும் அவர்கள் திறம்பட பங்களிப்பதால், அவர்கள் தொடர்ந்து சேவைகளை வழங்குகின்றமையை ஜனாதிபதி விரும்புகிறார் என ஜனாதிபதி செயலாளர் பி.பி. ஜயசுந்தர சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிளிநொச்சிக்கு சம்பிக்க விஜயம்; மக்கள் பிரச்சினைகள் கேட்டறிவு





கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க சிவபுரம்கிராம மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்டார்.

கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர், மாவட்ட அமைப்பாளர் சீலனின் வேண்டுகோளிற்கு அமைவாக சிவபுரம் கிராமத்திற்குச் சென்று அப்பகுதி மக்களின் பிரச்சினைகளை நேரில் பார்வையிட்டு கேட்டறிந்துகொண்டார்.இதன்போது மக்கள் வெள்ள அனர்த்தம் ஏற்படுதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அவரிடம் முன்வைத்தனர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அங்கம் - 213

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

### 552. அப்படி நடந்தவை என்ன?

ஆங்கிலேய அரசு 1919ஐ தொடர்ந்து மனிங் (Manning) சீர்திருத்தத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டு வந்த போது இந்தக் காலப்பகுதியில் அநாகரிக தர்மபாலாவின் சிங்கள, பௌத்த செயற்பாடுகள் முனைப்பு பெற்றிருந்தன. அதில் டி.எஸ். சேனநாயக்கா (பின்னாளில் இலங்கை முதல் பிரதமர்),அவரது சகோதரர் எவ்.ஆர்.சேனநாயக்கா இருவரும் இணைந்து செயற்பட்டனர்.அவர்களது உந்துதலினால் இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர்கள் தமிழ் மக்களது பிரதிநிதித்துவத்தை பலமாகக் குறைக்க முயற்சி செய்வதைக் கண்ட அருணாசலம் அவர்களுடன் முரண்பட்டார். சேனநாயக்கா சகோதரர்கள் இருவரும் அருணாசலத்தை தலைமைப் பதவியிலிருந்து விலத்தி, ஜேம்ஸ் பீரிஸை அதற்கு நியமித்தார்கள். அது மட்டுமல்லாது 1921 அரசாங்க சபைத் தேர்தல் அண்மித்ததும் முன்னர் தரப்பட்ட வாக்குறுதிகளின்படி கொழும்பு நகர ஆசனம் தமிழராகத் தனக்கு வழங்கப்பட வேண்டும் என அருணாசலம்கோரினார். அந்தவாக்குறுதிகள் எழுத்தில் தரப்பட்டவை - பண்டார



ஜேம்ஸ் பீரிஸ்

நாயக்கா பின்னர் செல்வநாயகத்துடன் 1956 செய்து கொண்ட ஒப்பந்தம் போல். ஆனால், எழுத்தில் கொடுத்ததையும் மறுத்து, நாக்கின் நாணயமும் இன்றி, ஜேம்ஸ் பீரிஸ் தான் இலங்கை தேசிய சங்கத்தின் தலைவராக இருந்த போது தந்த உறுதிமொழிகள்தன்னை இலங்கை தேசிய காங்கிரஸ் உறுப்பினராகக் கட்டுப்படுத்தாது என தெரிவித்தார்.

அவற்றால் – அந்த வெளிப்படையான துரோகத்தால் – நாணயமற்ற தன்மையினால் – அதிர்ந்து போன அருணாசலம் சமர்ப்பித்துத் தந்த வேட்பு மனுவையும் வாபஸ் பெற்று, இலங்கை தேசிய காங்கிரஸின் அடிப்படை உரிமையையும் நீக்கி கொண்டு, யாழ்ப்பாணத்தில் குடியேறினார். இவர்கள் இருவரும் இணைபிரியா நண்பர்களாக தேசியப்பரப்பில் எவ்வளவோ திட்டங்கள் நடைமுறைப் படுத்தியவர்கள். அருணாசலம் இந்த துரோகத்தை, தனது ஆதங்கத்தை, இப்படி பதிவிட்டார்:–

“சிங்கள – தமிழ் அரசியல் பிரச்சினை தற்போது இலங்கையர் மத்தியில் பெருமளவு குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. வாக்குறுதியில் ஞானத்தையோ சத்தியத்தையோ அதற்கு மற்றவர்கள் கட்டுப்பட்டவர்களோ அல்லவோ என்பதையிட்டு எமக்குத் தகவல் தருபவர் என்னதான் கருத்தைக் கொண்டிருந்தாலும், இந்த இரு தனவான்களும் தமது வாக்குறுதிக்குக் கட்டுப்பட்டவர்கள் என்பதும் அவற்றை அவர்கள் மதிப்பதும் தம்மை பின்பற்றுபவர்களையும் அதை மதிக்கும்படி தமது செல்வாக்கை பிரயோகிக்க



பண்டாரநாயக்கா

வேண்டுமென்பதிலும் அவசியமென்பதிலும் கேள்விக்கு இடமேயில்லை என்பது ஒரு சாதாரண மனிதனுக்கும் தெரியும். ஆனால் அவர்கள் அதனை மறுதலித்து விட்டனர். இனிமேலும் இந்த சிங்கள மக்களை நம்புவதற்குத் தமிழர் மறுத்து, தமது நலன்களை பாதுகாப்பதற்காக சுதந்திரமான நடவடிக்கை எடுக்க தீர்மானித்ததில் ஏதாவது ஆச்சரியம் உண்டா? எனது சொந்தக் கடமை தெளிவாகவே உள்ளது. நான் வாக்குறுதியைக்கைகொள்ளத்தான் வேண்டும்”.

அந்த துரோகத்தை தொடர்ந்து 1921 லிருந்து சுதந்திர காலமான 1944 வரை தமிழர்களிடமிருந்து இலங்கை தேசிய காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையில் உறவுகளிலிருக்கவில்லை. பிளவுகள் விரிசலடைந்தே இருந்தன. இலங்கை தேசிய காங்கிரஸ் ஒரு தூய சிங்கள அமைப்பாகவே இயங்கியது.

இவற்றின் பிரதிபலிப்புகளை நல்லாட்சி காலத்தில் சுமந்திரன், மாவை சேனாதிராசா, சம்பந்தன் போன்ற தலைவர்கள் ரணிலிடமிருந்தும் மைத்திரியிடமிருந்தும் அவர்கள் எப்படி பாவிக்கப்பட்டு விடப்பட்டார்கள் என்பதில் கண்டிருப்பார்கள். இவற்றின் முன்னோடியாகத்தான் அதுவரை கொழும்பை மையமாகக் கொண்டு



அருணாசலம்

அரசியலிலிருந்த அருணாசலம் யாழ்ப்பாணம் சென்று புதிய அத்தியாயத்தை தமிழர்களுக்கு எனத் தொடக்கி வைத்தார். ‘அது – தமிழ் ஈழம்’ என்பது.

### 553.அவை எப்பொழுது நடந்தன?

1923இல் இலங்கை தமிழ் மக்கள் சங்கம் (Ceylon Tamil League) என்ற பண்பாட்டு கழகத்தை உருவாக்கிய போது அதற்கு அரசியற் காரணங்கள் இருந்தாலும், அதன் இருப்புக்குக் காரணம் காலங்காலமாகத் தமிழரைத் தமிழராக்கிய தமிழ் இலட்சியங்களை வாழவைத்து வளர்க்க வேண்டும் என்பதும், முன்னையதான இந்த இலட்சியங்களை “தமிழ் அகம்” என்னும் தமிழ் தேசத்தின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையும் மேம்படுத்துவதாக இலங்கை, தென்னிந்தியா தமிழர் குடியேறிய நாடுகள் முழுவதிலும் வாழவைத்து வளர்ப்பது முக்கியமாகும் என அறிவித்தார்.

இந்த பண்பாட்டு கழகத்தை அமைப்பதற்கு முன் 15 ஒகஸ்ட் 1921 இல் தமிழர் மகாஜன சபை என யாழ்ப்பாண சங்கத் தலைவர் அ.சபாபதியையும் இணைத்து, இலங்கையின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகளை அழைத்து, பெரியதொரு மகாநாடு நடத்தினார். அதற்கு கனகசபை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கௌரவ டபிள்யூ. துரைசாமி முதலாவது தீர்மானத்தை பின்வருமாறு நிறைவேற்றினார்.

“தமிழரின் அரசியல், சமூகம், கல்வி, பொருளாதாரம், பொதுநலன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு தமிழ் மாகாஜன சபை என அழைக்கப்படும் ஒரு சங்கம் இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் அதன் கிளைகளுடன் உருவாக்கப்பட வேண்டுமென இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வந்து கலந்து கொண்ட தமிழரின் இந்த பொதுக் கூட்டம் தீர்மானிக்கிறது.”

எவராலும் தமிழ் மக்கள் கொடுமைப் படுத்தப்படுவதையோ அச்சுறுத்தப்படுவதையோ அவர் ஏற்கவில்லை. எவருக்கும் அடிமையாக இருப்பதையும் வெறுத்தார். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள தமிழ் மக்கள் தங்களை பலப்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் எண்ணிக் காரியங்களாற்றினார்.

ஆனால் இவற்றை அமைத்த மூன்று வருடங்களுக்குள்ளேயே அருணாசலம் இயற்கை எய்தினார். அவரது மறைவைத் தொடர்ந்து சகோதரரும் இறந்தார்கள்.

அருணாசலம் தேசிய பரப்பில் தலைவராக இயங்கி கொண்டிருந்த காலப்பகுதியில்தான் கண்டிய சிங்களவர் தங்களை தனித்துவ மக்கள் குழுவாக கணித்து, தமது உரிமைகள் பாதுகாக்கப்பட கண்டி பிரதேசத்தில் உள்ள பிரதேசங்களில் கண்டியரே போட்டியிட வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தனர். இலங்கை தேசிய காங்கிரஸ் தொடக்கத்தில் இந்த பிரேரணைக்கு இணக்கத்தை தந்திருந்தாலும் பின்னர் கரையோர சிங்கள மக்களை கண்டியிலுள்ள பிரதேசங்களில் போட்டியிட வைத்து வெற்றியும் பெற்று அவற்றைக் கைப்பற்றினர்.

இவற்றின் தாக்கங்களாக கண்டி சிங்களவர் சமஷ்டி கோரிக்கையை முன்வைத்தனர். அதனை எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா ஆதரித்தார். அவர் அந்த சமஷ்டி கொள்கையை தனது உறுதியான கொள்கையாக வைத்து அது கண்டியர்களுடைய பிரதேசங்கள், வட – கிழக்கு இணைந்த தமிழ்பிரதேசங்கள்,கரையோர சிங்களவர் பகுதிகள் சமஷ்டி முறையில் பிரிக்கப்பட்டு ஆளப்படவேண்டும் என 1926 இல் யாழ்ப்பாணத்தில் உரையாற்றியிருந்தார்.

பின் இலங்கைக்கு சுதந்திரம் தர பிரித்தானியா இணங்கிய போது தமிழ்



அ.சபாபதி

மக்களுக்கு நீதியான பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற கோரிக்கைகளே முன்வைக்கப்பட்டன. சேனநாயக்கா சகோதரர்கள் சிங்கள பௌத்தத்தின் உதவியுடன் எடுத்த மேம்பாடுகளால் சோல்பரி குடியரசு சட்டத்தின் 29 ஆவது சரத்து சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு தரும் என உறுதி வழங்கப்பட்டது.

சமஷ்டி ஆட்சிமுறையை உறுதியாக ஆதரித்த பண்டாரநாயக்கா 1956 இல் தனிச்சிங்கள சட்டம் கொண்டுவருவேன் என அறிவிக்க, அதுவரை காலமும் இருமொழிக்கொள்கையில் நின்ற ஜே.ஆர். அதனை தானும் தருவேன் என புறப்பட்டு, பின் பண்டாரநாயக்கா இணங்கி ஏற்றுக் கொண்ட பண்டா – செல்வா ஒப்பந்தத்தையும் கிழிக்க வைத்தார்.

சமஷ்டிக்காக உறுதியாக நின்ற பண்டாரநாயக்கா கூட சமஷ்டி தமிழர்களுக்கு என்ற போது அதனை வன்மையாக எதிர்த்தார்.

அருணாசலத்துக்கு செய்த துரோகங்கள் நடந்து 100 வருடங்கள் எட்டிவிட்டன.

இடைப்பட்ட காலங்களில் தமிழ் மக்கள் எதிர் கொண்ட ஒப்பந்தங்கள், இணக்கங்கள், அவர்கள் தங்களைப் பாதுகாக்க ஏற்படுத்திக்கொண்ட அரண்கள், அவற்



துரைசாமி

றின் எதிர்வனைகளில் ஏற்பட்ட அழிவுகள், அட்டூழியங்கள் பற்றி விவரிக்கத் தேவையில்லை .

சிங்கள அரசியல்வாதிகளின் கெட்டிக்காரத் தந்திரம் தான் பின்னர் அருணாசலத்திற்கு வெண்கலத்தில் ஒரு சிலை நாடாளுமன்றுக்கு முன்வைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வந்து, அதற்கு ஒரு குழு அமைக்கப்பட்ட பொழுது தனது நண்பருக்காக ஜேம்ஸ் பீரிஸே தலைமை ஏற்று சிலையை நிறுவினார்.

(வளரும்...)

# பிரியந்த குமாரவின் குடும்பத்தின் நலனுக்காக அர்ப்பணிப்புடன் அரசாங்கம் செயற்படுகின்றது

## ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு



சியல்கோட்டில் உயிரிழந்த இலங்கையரின் குடும்பத்தின் எதிர்காலத்துக்குத் தேவையான நடவடிக்கையை எடுத்துவருவதாக அரசாங்கம் கூறியுள்ளது.

அதன்படி பிரியந்த குமாரவின் பிள்ளைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் எதிர்காலத்துக்காக பாகிஸ்தான் அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் தொடர்ந்து செயற்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், குறித்த நபரின் குடும்ப உறுப்பினர்களின் எதிர்கால நலனுக்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகத் தெரிவித்தார்.

அத்தோடு இழப்பீடுகளை பெற்றுக்கொள்வது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக பாகிஸ்தான் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் பேச்சு நடத்திவருவதாகவும் அவர் கூறினார்.

மேலும் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக நாளாந்தம் தெரியப்படுத்துவதாக பாகிஸ்தான் அரசாங்கம் உறுதியளித்துள்ளது என்றும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

# பாகிஸ்தானில் இலங்கையர் படுகொலை; கல்முனை மாநகர முதல்வர் கண்டனம்



பாகிஸ்தானில் இலங்கையர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டமை மிலேச்சத்தனமான செயலாகும் எனத் தெரிவித்துள்ள கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

மேலும் சம்பவம் குறித்து புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப், வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

'பாகிஸ்தானில் தொழில் நிறுவனமொன்றில் நீண்ட காலமாக முகாமையாளராக கடமையாற்றி வந்த நிலையில், எமது நாட்டுப் பிரஜை ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு, எரித்துப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.

இன, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் முஸ்லிம் நாடொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றிருப்பதானது இலங்கை வாழ் முஸ்லிம்களாகிய எமக்கு பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த மிலேச்சத்தனமான சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமது நாட்டில் பணியாற்றுகின்ற வெளிநாட்டுத் தொழிலாளர்களை பாதுகாக்க வேண்டியது குறித்த நாட்டு அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

அந்தவகையில் பாகிஸ்தானில் இடம்பெற்றுள்ள சம்பவத்திற்கு அந்நாட்டுப் பிரதமர் எமது நாட்டு ஜனாதிபதியுடன் தொடர்புகொண்டு, வருத்தம் தெரிவித்திருப்பதுடன் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் எனவும் உறுதியளித்திருக்கின்றார்.

மேலும், சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகிறது. பாகிஸ்தான் பிரதமரின் இந்த முன்மாதிரியான செயற்பாடு எமது நாட்டு மக்களுக்கு ஆறுதலான விடயம் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையுடன் நீண்ட காலமாக நட்புறவை பேணி வருகின்ற பாகிஸ்தானில் இத்தகைய சம்பவம் ஒன்று நடத்தப்பட்டிருப்பதானது, அந்நாட்டின் இறைமைக்கும் புகழுக்கும் மாசு கற்பிக்கும் நடவடிக்கையாக அமைந்திருக்கிறது.

ஆகையினால் இதன் பின்புலம் என்ன என்பது குறித்து ஆராயப்பட்டு, உண்மை நிலைவரம் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுடன் படுகொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தினருக்கு உடனடியாக உரிய நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் இதன் மூலம் பாகிஸ்தான் தனது பொறுப்புடைமையையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்' – என அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது பிரியந்தவின் சடலம்!

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் உடல் நேற்று மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யு.எல். 186 விமானத்தின் மூலம் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் பணியாற்றிய இலங்கையரான பிரியந்த குமார கடந்த வெள்ளிக்கிழமை மிகக் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டமையுடன், உயிருடன் எரிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், பிரியந்தவின் மரணத்திற்கு நீதி வேண்டும் என்ற கோரிக்கையும் வலுப்பெற்றுள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தான் லாகூரிலிருந்து புறப்பட்ட யு.எல்.186 என்ற இலக்கத்தைக் கொண்ட ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமானம் மூலம் அவரது உடலை தாங்கிய பேழை எடுத்துவரப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று பிரியந்த குமாரவின் உடல் கட்டுநாயக விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கல்முனை பிராந்தியத்தில் மின்வெட்டு அமுலில்

அவசரத் திருத்த வேலை காரணமாக கல்முனை, நிந்தவூர் மற்றும் சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

இதன்படி, இன்று (செவ்வாய்க்கிழமை) பாண்டிருப்பு, அக்பர் கிராமம் ஆகிய பகுதிகளிலும் சனிக்கிழமை, நீதிமன்ற வீதி, ரெஸ்ட் ஹவுஸ் வீதி, வீட்டுத்திட்டம் குறுந்தயடி, பாலமுனை, அட்டாளைச்சேனை, ஒலுவில் வீட்டுத் திட்டம், ஹிச்ரா பிரதான வீதி, அம்பாறை வீதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

எதிர்வரும் 13ஆம் திகதி சின்னாபாலமுனை மற்றும் கோணவத்தை ஆகிய பகுதிகளிலும் எதிர்வரும் 14 ஆம் திகதி அம்பாறை வீதி, வங்கலாவாடி, சென்னல்கிராமம் ஆகிய பகுதிகளிலும் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

18ஆம் திகதி, வைத்தியசாலை வீதியிலிருந்து தாளவெட்டுவான் ப்ரதர் ஹவுஸ் வீதி, மணல்சேனை, மருதமுனை, துரவந்தியமேடு, பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, சென்னல்கிராமம் மலையடிகிராமம் ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

21ஆம் திகதி, மைகாட்டி இருந்து நைனாகாடு ஆகிய பகுதிகளிலும் 29ஆம் திகதி, சின்னாபாலமுனை மற்றும் கோணவத்தை ஆகிய பகுதிகளிலும் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# சமூகத்தின் இழப்புக்கள் பலவற்றை கல்வியால் மீண்டும் நிவர்த்திக்கலாம்

## கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு



கல்வியை தொடர்ச்சியாக கற்பதன் மூலம் எமது சமூகத்தின் இழப்புக்கள் பலவற்றை மீண்டும் நிவர்த்தி செய்ய முடியும்.நாட்டிலே இரண்டு வருடங்களாக மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது என கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கண்ணகி வித்தியாலயத்தின் கல்வி திறன் வகுப்பறைத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

'எமது சமூகம் சார்ந்த பாடசாலைகள் பல கடப்பிரதேசங்களிலும்,வளங்கள் குறைவாகவும் காணப்படுகின்றன.பெற்றோர்களினதும்,சமூகத்தின் ஆர்வலர்களினதும் ஒத்துழைப்புடன் பாடசாலைகள் நடைபெறுகின்றன. எமது சமூகத்தின் இன்றைய கட்டாயத் தேவையாக கல்வி திகழ்கின்றது.

கல்வியை தொடர்ச்சியாக கற்பதன் மூலம் எமது சமூகத்தின் இழப்புக்கள் பலவற்றை மீண்டும் நிவர்த்தி செய்ய முடியும்.நாட்டிலே இரண்டு வருடங்களாக மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது.இவ்வாறு இழந்த கல்வியை நிவர்த்தி செய்வதற்கு எமது சமூகம் சார்ந்தவர்கள்,நிறுவனங்கள், புத்திஜீவிகள் எம்முடைய சமூகத்தின் கல்வித் தேவைக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இலத்திரனியல் கல்வி தொண்டு நிறுவனத்தினரின் உதவிகள்,ஒத்தாசைகளை நான் பாராட்டுகின்றேன்.எமது சமூகத்தின் உயிர்நாடியான கல்வியை குறித்த நிறுவனத்தினர் செய்யும் நல்லெண்ணங்களால் எம்முடைய மாணவர்கள் கல்வியில் சாதனை படைக்கின்றார்கள்.இவ்வாறான செயற்பாடுகளை பார்க்கும்போது நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று திறன்வகுப்பறைகள் திறக்கப்படுகின்றன.இதன் மூலம் திறன் கல்வியை ஆசிரியர்கள் சரியான பாதையில் மாணவர்களுக்கு ஊட்டிவிட்டு கல்வியில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ள முடியும்.இதன்மூலம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மேன்மையடையும்.

இன்னும் சில மாதங்களின் பின்னர் க.பொ.த. உயர்தரப்பரீட்சை மற்றும் புலைமைப் பரீட்சைகள் நடாத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.இவ்வாறான பரீட்சைகளில் மாணவர்கள் சித்தியடைவதற்கு ஆசிரியர்கள்,வகுப்பாசிரியர்கள் கவனம் செலுத்தி கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு இருக்கின்றது. இதன் மூலம் மாணவர்கள் இழந்த கல்வியை பெறக்கூடிய வாய்ப்பாகவுள்ளது' எனத்தெரிவித்தார்.

# கடும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் ஆபத்து இலங்கைக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

## அபுதாபியில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொவிட் பரவல் காரணமாக சுகாதார கட்டமைப்பு மற்றும் அரச நிதி என்பவற்றுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் காரணமாக எதிர்வரும் வருடத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். அபுதாபியில் இடம்பெற்றுவரும்



இந்து சமுத்திர மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

கொவிட் பரவல் காரணமாக உலகப் பொருளாதாரத்தின் மீதான தாக்கம் தொடர்ந்து வளரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும், சர்வதேச நாணய நிதியம் தயாரித்த மதிப்பீட்டின்படி, பல நாடுகளில் தனிநபர் வருமானம் தொற்றுப்பரவலுக்கு முன்னர் இருந்ததை விட வீழ்ச்சியை சந்தித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொவிட் நிலைமையின் காரணமாக ஏற்பட்டுள்ள அழிவு, பிராந்திய காலநிலை மாற்றத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் என்பவையால் அடுத்த வருடத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கைதடியில் வெடித்தது எரிவாயு காஸ் அடுப்பு



யாழ்ப்பாணம் – கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு நேற்று வெடித்து சிதறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி வடக்கு பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கை முழுவதும் எரிவாயு அடுப்புகள், எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த நிலையிலேயே கைதடி பகுதியில் எரிவாயு அடுப்பு வெடித்த சம்பவம் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எம்மால் சகித்துக் கொள்ள முடியவில்லை உயிரிழந்த பிரியந்தவின் சகோதரர் உருக்கம்

உலகில் உள்ள அனைவருக்கும் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமை இருக்க வேண்டும். உலகில் எங்கும் இவ்வாறான துயரச் சம்பவங்களை சகித்துக் கொள்ள முடியாது என பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் சகோதரர் கமல் குமார தெரிவித்துள்ளார்.

தனது சகோதரரின் மரணம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே கமல் குமார இதனைத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்த குமாரவின் சடலம் நேற்று இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் பிரதான சந்தேக நபர் உட்பட 235 பேர் சியால்கோட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் 900 பேருக்கு எதிராக ஆரம்பகட்ட விசாரணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தச் சம்பவத்தில் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் உயிரிழந்த பிரியந்தவின் சகோதரர் மேலும் குறிப்பிடுகையில் –

அண்ணனை இழந்துவிட்டோம். என்ன இருந்தாலும் மனித வாழ்வு மீள முடியாது. அதனால் உலகில் எங்கும் இது நடக்கக்கூடாது. உலக மக்கள் தங்கள் சொந்த எண்ணங்களுடன் சுதந்திரமாக வாழ உரிமை உண்டு. இனியும் இப்படி ஒரு கொடூரம் இடம்பெறாமல் இருக்க நாம் முயற்சி செய்வோம் என உருக்கமான கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

# அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 'பட்ஜட்' ஏகமனதாக நிறைவேற்றம்!



அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 56 ஆவது அமர்வு பிரதேச சபை தவிசாளர் ஏ.எல் அமானுல்லா தலைமையில் சபா மண்டபத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.

இதன்போது வழமையான சபை நடவடிக்கையை தொடர்ந்து பிரதேச சபை தவிசாளரால் 2022ஆம் ஆண்டுக்கானவரவு – செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

தேசிய காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய 4 கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 18 உறுப்பினர்களை கொண்ட சபையில் 15 உறுப்பினர்கள் கலந்து கொண்ட சபை அமர்வில் வரவு – செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## 9 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பூஸ்டர் பெற்றனர்

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது டோஸைப் பெற்றுகொண்டவர்களின் எண்ணிக்கை 9 லட்சத்து 50 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை 9 லட்சத்து 56 ஆயிரத்து 946 பேர் கொரோனாத் தடுப்பூசியின் மூன்றாவது டோஸைப் பெற்றுக்கொண்டுள்ளனர் எனத் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பாக நாட்டில் ஞாயிற்றுக்கிழமை நாளில், 19 ஆயிரத்து 633 பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன எனத் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஞாயிற்றுக்கிழமை 17 ஆயிரத்து 644 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், 868 பேருக்கு பைஸர் தடுப்பூசியின் முதலாவது டோஸும் 220 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன.

அதேநேரம் 201 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸும் 3 ஆயிரத்து 677 பேருக்கு தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் செலுத்தப்பட்டன.

# இரு வெவ்வேறு இடங்களில் மாதகல் கடற்பரப்பில் கஞ்சா







இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் பகுதியில் 276 கிலோ எடையுடைய கேரளா கஞ்சாவுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போது நேற்று (திங்கட்கிழமை) காலை 7.30 மணியளவில் மாதகல் பகுதியைச் சேர்ந்த இருவர் கஞ்சா கடத்தி வந்தவேளை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்களிடமிருந்து டிங்கி படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாதகல் கடற்பரப்பில் 7 மூடைகளில் மிதந்த 275 கிலோ கிராம் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதாக இருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கஞ்சாக்களை கடற்படையினர் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு எடுத்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு அல்ரா சவுண்ட் ஸ்கேன் அன்பளிப்பு



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 75 லட்சம் ரூபா பெறுமதியான அல்ரா சவுண்ட் ஸ்கேன் இயந்திரம் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று (திங்கட்கிழமை) காலை 9 மணியளவில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மக்கள் வங்கி ஊழியர்களின் பங்களிப்பில் ஏற்கனவே கொழும்பு போதனா வைத்தியசாலைக்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் இந்த இயந்திரம் வழங்கப்பட்ட நிலையில் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் ரஞ்சித் கொடித்துவக்கு, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா உள்ளிட்ட வைத்தியர்கள், வங்கி அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# பெண்களுக்கு எதிராக வன்முறைகளை நிறுத்துவோம் மலையகப் பகுதிகளில் விழிப்புணர்வு முன்னெடுப்புகள்

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கண்டித்து மலையகத்தில் பல பாகங்களில் பல்வேறு விழிப்புணர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் 'பெண்களுக்கு எதிரான துன்புறுத்தல் மற்றும் வன்புணர்வுகளை நிறுத்துவோம்' எனும் தொனிப்பொருளில், புரொடெக்ட் அமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்வுகள் நோர்வூட் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான புரொடெக்ட் .அமைப்பின் தலைவி கருப்பையா மைதிலி தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில், வீதிநாடகமும் விழிப்புணர்வும் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் அரச சார்பற்ற அதிகாரிகள், சிவில் அமைப்பினர் உட்பட புரொடெக்ட் .அமைப்பின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பெண்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# படுகொலையில் இருந்து இலங்கையரை காப்பாற்ற முயற்சித்த நபருக்கு விருது!

## பாகிஸ்தான் அறிவிப்பு



படுகொலையில் இருந்து இலங்கையரைக் காப்பாற்ற முயற்சித்த நபருக்கான விருதை பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

சியால்கோட் தொழிற்சாலையில் உள்ள கும்பலிடம் இருந்து இலங்கைப் பிரஜையைக் காப்பாற்றுவதற்கு தயாரிப்பு முகாமையாளர் என அடையாளம் காணப்பட்ட நபரொருவர் தீவிர முயற்சிகளை மேற்கொள்கின்றமை சி.சி.ரி.வி. காட்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த நிலையில், குறித்த நபரின் மனிதாபிமான செயலைப் பாராட்டி 'தம்ஹா ஐ சுஜாத்' என்ற அதியுயர் விருதை வழங்கவுள்ளதாக பிரதமர் இம்ரான்கான் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர்–

மத அடிப்படைவாதிகளால் பிரியந்த குமார தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவரைக் காப்பாற்றுவதற்கு மலிக் அதான் மாத்திரம் போராடியிருந்தார். அவரது மனிதாபிமான செயல் முழு பாகிஸ்தானுக்கும் கௌரவத்தை ஏற்படுத்தியுள்ளது. –எனப் பதிவிட்டுள்ளார்.

# சமையலறை செல்லும் பெண்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை!

## விஜித ஹேரத் வேதனை



சமையலறைக்கு சமைக்க செல்லும் பெண்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஹற்றனில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

நாட்டில் தற்போது எரிவாயு அடுப்புகள் வெடித்து சிதறி வருகின்றன. இதற் கான காரணங்களைக் கண்டறிந்து தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அரசு துரிதம் காட்டவில்லை.

மாறாக எரிவாயு அடுப்பு வெடிப்புக்கும் எரிவாயு சிலிண்டருக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லையென ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர். தனது இயலாமையையும் பலவீனத்தையும் மறைப்பதற்காகவே இப்படியான கருத்துகளை முன்வைத்துவருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட மின் விநியோக துண்டிப்புக்கும் இதே பாணியில்தான் முட்டாள்தனமான கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

காஸ் சிலிண்டர்களின் உள்ளடக்கத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலேயே வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

அதேவேளை, சமையலறைக்கு சமைக்கு செல்லும் பெண்களுக்கு இன்று உயிருக்கு உத்தரவாதம் இல்லை. எந்நேரத்தில் வெடிப்பு சம்பவம் இடம்பெறும் என்ற அச்சம் உள்ளது. இந்த அரசை விரட்டியடித்து, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஆட்சியை உருவாக்குவதற்குத் தமிழ், சிங்கம், முஸ்லிம் என அனைத்து இன மக்களும் தயாராகிவிட்டனர். நாளை வேண்டுமானாலும் அவர்கள் இதனைச் செய்வார்கள். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## மத்திய வங்கி பிணைமுறி மோசடி;

# 11 குற்றச்சாட்டுக்களில் இருந்து முன்னாள் அமைச்சர் விடுதலை



2016 மத்திய வங்கியின் பிணைமுறி வழங்கல் மோசடி தொடர்பான வழக்கில் 22 குற்றச்சாட்டுகளில் 11 இல் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) கொழும்பு மேல்நீதி மன்ற விசேட தீர்ப்பாயம் முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# சந்திரகுமார் – சம்பிக்க ரணவக்க இடையில் விசேட கலந்துரையாடல்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாருக்கும் மற்றும் சம்பிக்க ரணவக்கவிற்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது. குறித்த கலந்துரையாடலுக்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் விருந்தகம் ஒன்றில் இடம்பெற்றது. இதன்போது கலந்துரையாடல் தொடர்பில் செய்தி அறிக்கையிடுவதற்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

விருந்தகத்துக்கு வருகை தந்திருந்த முன்னாள் அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் , சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான முருகேசு சந்திரகுமார் வரவேற்றமையுடன், கரைச்சி பிரதேச சபையில் சுயேச்சைக்கூழு ஊடாகத் தெரிவான பிரதேச சபை உறுப்பினர்களும், சுயேச்சைக்குழு தலைவர் மனோகரன் ஆகியோர் வரவேற்றனர். தொடர்ந்து விருந்தக மண்டபத்தில் விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



# நாடாளுமன்ற வளாகத்தில் மக்கள் சக்தி போராட்டம்

நாடாளுமன்றவளாகத்தில்நேற்று(திங்கட்கிழமை) ஐக்கிய மக்கள் சக்தியினர் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றம் நேற்று கூடிய நிலையில் சபை நடவடிக்கையையும் ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்திருந்தது.

எதிரணி உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை, சபை அமர்வில் பங்கேற்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது.

இந்நிலையில் நாடாளுமன்ற வளாகத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினர் நடத்திய போராட்டத்தை அடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அவர்களைச் சந்தித்து கலந்துரையாடி இருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

# முல்லைத்தீவுக் கடலில் மூழ்கிய மூன்று பேரும் சடலங்களாக மீட்பு



முல்லைத்தீவு கடலில் நீராடச் சென்று, நீரில் மூழ்கி காணாமல்போயிருந்த மூன்று இளைஞர்களும் சடலங்களாக மீட்டுக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குறித்த சம்பவத் தில் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட நிலையில், ஏனைய இருவரின் சடலங்களை தேடும் நடவடிக்கை அப்பகுதி கடற்றொழிலாளர்கள், பொலிஸார் ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர்களது சடலங்களும் நேற்று கண்டெடுக்கப்பட்டன.

நேற்று குறித்த பகுதிக்கு யுவதி உள்ளிட்ட நான்கு பேர் வாகனத்தில் வந்து, அப்பகுதியிலுள்ள கடலில் குளித்தபோது ஆண்கள் மூவரும் கடலில் மூழ்கிய சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா - மதகுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய மனோகரன் தனுசன், தோணிக்கல் வவுனியாவைச் சேர்ந்த 26 வயதுடைய விஜயகுமாரன் தர்சன், வவுனியா - மதகுவைத்த குளத்தைச் சேர்ந்த 26 வயதுடைய சிவலிங்கம் சகிலன் ஆகியோரே கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

## காதலியைக் கடத்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேகமா கச் சென்றதில் டிப்பர் கவிழ்ந்தது. அதில் 17 வயது இளைஞன் ஒருவன் உயிரிழந்தான். கடத்தப்பட்ட பெண் உட்பட இருவர் காயத்துடன் மீட்கப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓட்டம் எடுத்தனர்.

புளியம்பொக்கணையைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலித்த முத்தையன் கட்டைச் சேர்ந்த இளைஞன், தன் காதலியை வீட்டில் இருந்து கடத்திச் செல்ல ஒரு டிப்பர் வாகனத்தைப் பயன்படுத்தியுள்ளான். இவ்வாறு பலர் வந்து தனது சகோதரியை டிப்ப ரில் கொண்டு சென்ற சமயம், சகோதரன் பின் தொடர்ந்து கலைத்துச் சென்றுள்ளார். சகோதரன் நெருங்கி வந்து பெண்ணை மீள அழைத்துச் சென்று விடுவார் என்ற அச்சத்தில் டிப்பரை வேகமாகச் செலுத்தியுள்ளனர்.

வேகமாக பயணித்த டிப்பர் வட்டக்கச்சிப் புதுப்பாலம் பகுதியில் உள்ள வெள்ள வாய்க்காலிற்குள் கட்டுப்பாட்டை இழந்து, தடம் புரண்டுள்ளது. இதன்போது டிப்பரில் இருந்த டிலக்ஷன் என்ற இளைஞன் டிப்பரின் கீழ் நசி யுண்டு இறந்துள்ளான்.

சம்பவ நேரம் டிப்பரில் பெண்ணின் காதலன் உட்பட பலர் இருந்தபோதும், அனைவரும் ஓடித் தப்பினரா அல்லது எவராவது அருகில் இருந்த வாய்க்கா லில் அடித்துச் செல்லப்பட்டனரா என நீண்ட தேரம் தேடுதல் இடம் பெற்றபோதும் வாய்க்காலில் எவரும் இருக்கவில்லை.

இதேநேரம் சம்பந்தப்பட்ட பெண் காயத்துடன் டிப்பரின் முன் பகுதியில் வெளியே வர முடியாதவாறு அகப்பட்டிருந்த சமயம், பின்தொடர்ந்து சென்ற சகோதரன் கண்ணாடியை உடைத்து, சகோதரியை மீட்டு, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். அவர் மேலதிக சிகிச்சைக்கா யாழ்.போதனா வைத்தியசா லைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இச் சம்பவத்தில் காயமுற்ற இன்னொருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதேநேரம் இறந்தவர் தொடர்பில் வட்டக்கச்சி பொலிஸார் மேலதிக விசாரணை களில் ஈடுபட்டுள்ளனர்.

## எதிர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார்.

சபைக்குள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுக் காலை நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வேளையில் அந்த இடத்துக்குச் சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அங்கிருந்தவர்களுடன் சுமுகமாகக் கலந்துரையாடியுள்ளமையுடன், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தும்போது இதற்கும் மேல் எம்.பிக்களை கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதன்போது, ராஜித சேனாரத்ன, பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவ்விடத்தில் இருந்தமையுடன், அவர்களுடன் கடந்த காலங்களில் தான் முன்னெடுத்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் பிரதமர் நினைவு கூர்ந்துள்ளார்.

## டெங்கு ஒழிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதேச மட்ட, கிராமிய மட்ட டெங்கு ஒழிப்பு தொடர்பான கூட்டங்கள் நடத்தப்பட்டு, டெங்கு நுளம்பு கட்டுப்பாடு காலப்பகுதியில் பாடசாலைகள், பொது இடங்கள், அலுவலகங்கள், வீடுகளில் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு கட்டுப்பாடு காலப்பகுதியில் அரச தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், மதஸ்தலங்கள், பாடசாலைகள், பொது இடங்கள், வீடுகளில் டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழிக்க வேண்டும்.

மாகாணத் தடை நீக்கப்பட்டுள்ள நிலையில் டெங்கு வைரஸ் தொற்றுள்ள ஒருவர் வெளி மாகாணங்களில் இருந்து இங்கு வருகை தந்தால் டெங்கு நோய் எந்த நேரத்திலும் யாழ்ப்பாணத்தில் பரவும் வாய்ப்புள்ளது. ஆகவே, பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் 238 பேர் இந்த வருடத்தில் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகியுள்ளனர். அவற்றில் யாழ்ப்பாணத்தில்147 பேரும், மன்னாரில் 25 பேரும், கிளிநொச்சியில் 25 பேரும், முல்லைத்தீவில் 36 பேரும், வவுனியாவில் 5 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். டெங்கு சம்பந்தமாக இறப்புக்கள் எதுவும் பதிவாகவில்லை - என்றார்.

## சபை அமர்வைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சென்றிருக்கவில்லை.

இதேவேளை, நாடாளுமன்றத்துக்கு முன்னால் நேற்று காலை அவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான விவாதத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்காரவுக்கு உரையாற்றுவதற்காக மேலதிக நேரத்தை வழங்காமை தொடர்பில் சபையில் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

இதன்போது சபைக்குள் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில், மறுநாள் சனிக் கிழமை அது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலை நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இது தொடர்பாக இணக்கம் காணப்படாத நிலையில், அவர்கள் நேற்றைய சபை நடவடிக்கைகளைப் புறக்கணிக்கத் தீர்மானித்தனர்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு நாள்களில் இடம்பெற்ற அமைதியின்மை சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழுவொன்றை அமைப்பதற்கு சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

இந்த வாரத்துக்குள் இந்தக் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் தெரிவித்தார்.

# அராஜக செயலால் தீர்வை ஒருபோதும் எட்டவே முடியாது

## அரசிடம் வேலுகுமார் எம்.பி. இடித்துரைப்பு

அரசு தனது பலவீனத்தை மறைக்க, நாடாளுமன்றத்தில் அடக்குமுறையை - அராஜகத்தை கையில் எடுத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். வேலுகுமார் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் ஜனநாயகத்தின் உயரிய தளம் நாடாளுமன்றம். அங்கே மக்களது பிரச்சினைகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கான பூரண வாய்ப்பு காணப்பட வேண்டும். கருத்து சுதந்திரம் பூரணமாக பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கான வசதியை சபாநாயகர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆனால், இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்களால் மக்கள் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் பேச முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அரச தரப்பின் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இந்தச் சூழ்நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியும் அதனது பங்காளிக் கட்சி உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேறி நாடாளுமன்ற அமர்வைப் பகிஷ்கரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இன்று அரசில் உள்ள அமைச்சர்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தங்களது தேர்தல் தொகுதிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. கிராமத்துக்கு, நகரத்துக்குச் சென்று மக்களைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அரச தரப்பு உறுப்பினர்கள் குழப்பமடைந்த நிலையில் உள்ளனர். தமது விரக்தியை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மீது சுமத்தப் பார்க்கின்றனர். நாம் கேட்பது உங்களால் முடியுமாக இருந்தால் மக்களிடம் செல்லுங்கள். மக்கள் எழுப்பும் கேள்விகளுக்கு விடை கூறுங்கள். மக்கள் பிரச்சினை களுக்குத் தீர்வுகளை முன்வையுங்கள். அதனை விடுத்து அடிதடியால் தீர்வுகளை எட்ட முடியாது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கருத்துக்களைச் சுதந்திரமாக முன்வைப்பதற்கான சூழ்நிலையை சபாநாயகர் உடனடியாக ஏற்படுத்த வேண்டும். இலங்கை நாடாளுமன்றத்தில் ஜனநாயக ரீதியாக உறுப்பினர்களுக்குக் காணப்படும் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும்.

அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லதைக் கொண்டு வந்து தரும். அதேபோல் சர்வதேசத்துக்கு எமது நாட்டைப் பற்றிய சரியான செய்தியைப் பெற்றுக் கொடுக்கும். அதனை விடுத்து மக்கள் பிரதிநிதிகளின் கருத்துச் சுதந்திரத்தை அடக்கி ஒடுக்கி பிரச்சினைகளை மூடிமறைத்து இந்த அரசை முன்கொண்டு செல்ல முடியும் என நினைப்பது வெறும் சிறுபிள்ளைத்தனமான செய லாகும் - என்றார்.

# அரச வன்முறைக்கு உடன் முடிவு கட்டப்பட வேண்டும்

## ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குக் எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சஜித் வலியுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்திய அமைச்சர்கள் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அரசுக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர், சபாநாயகரிடம் இந்த வலியுறுத்தலை விடுத்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது சபாநாயகரின் பொறுப்பாகும். அதற்கான உத்தரவாதத்தை அவர் இன்னும் வழங்கவில்லை. சபாநாயகர் நடுநிலையாகச் செயற்பட வேண்டும். மனுஷ விவகாரத்தில் தற்போதைய சபாநாயகர் மௌனம் காக்கின்றார்.

மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்திய ஆளுங்கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சபைக்குள் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். அரச வன்முறைக்கு முடிவு கட்டப்பட வேண்டும் - என்றார்.

# பிணைமுறி மோசடி வழக்கின் 11 குற்றச்சாட்டுக்களில் இருந்து ரவி கருணாநாயக்க விடுதலை

இலங்கையில் மத்திய வங்கி பிணைமுறி மோசடி வழக்கின் 11 குற்றச்சாட்டுக்களில் இருந்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2016 நல்லாட்சி அரசில் ரவி கருணாநாயக்க நிதி அமைச்சராகச் செயற்படும் போது, மத்திய வங்கி பிணைமுறிகளில் மோசடி இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து அவர் அமைச்சர் பதவியையும் இராஜினாமா செய்தார்.

பிணைமுறி மோசடி வழக்கில் ரவி கருணாநாயக்க மீது 22 குற்றச்சாட்டுக்கள்



முன்வைக்கப்பட்டுள்ளன.

அதில் 11 குற்றச்சாட்டுக்களில் இருந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான வழக்குகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம் பெற்று வருகின்றன.

## பெண் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிலிண்டர் வெடித்துள்ளது.

அந்தப் பெண் காஸ் சிலிண்டர் அண்மைக்காலமாக வெடிப்பதால் அவதானமாகவும், முன் எச்சரிக்கையுடனும் இருந்தமையால் உடனடியாகச் சிலிண்டரை அணைத்துவிட்டு அங்கிருந்து வெளியேறியுள்ளார். இந்த வெடிப்பின்போது காஸ் சிலிண்டர் அடுப்பு உடைந்து சேதமாகியுள்ளது.

இருப்பினும், வீட்டில் உள்ளவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா பொலிஸார் இது தொடர்பில் தடவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (100)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.12.2021 இல் வெளியிடப்பெற்றது.